மைகள் பட்டப்பகலில் நடந்து வருவதைக் கண்ணுற்றும் "காங்கரசே இந்தியாவின் ஏக பிரதிநிதி ஸ்தாபனம்; நாட்டுக்கு நன்மை செய்யக் கூடியது காங்கரசே; காங்கரஸ்காரர் செய்வதை எவரும் ஆட்சேபிக்கக்கூடாது" எனக் கூறுவோர் புத்திசாலிகளா? மூடர்களா? வஞ்சகர்களா? என்பதை தேச மக்களே முடிவு செய்து கொள்ளட்டும்.

---

## தோழர் கெ. என். ஸ்டாலின் ஜெகதீஸ் தேக நிலை.

:0:

### இன்று (6-6-38) 37-ம் நாள் பட்டினி.

---

(நமது நிருபர்)

சென்னை, ஜூன் 6.

தலைவர்கள் ஈ. வெ. ரா. சௌந்தரபாண்டியன், திருச்சி விஸ்வநாதம், சிவராஜ், நாகை மணி, எஸ். வி. லிங்கம் முதலானவர்கள் தோழர் ஸ்டாலின் ஜெகதீஸ் அவர்களிடம் நெடுநேரம் தங்கியிருந்தார்கள். நேற்று 5-6-38 மாலை 4-30 மணிக்கு சென்னை பீப்பில்ஸ் பார்க்கில் இருந்து ஹைக்கோர்ட்டுக் கடற்கரைக்குப் புறப்பட்டபிரமாண்டமான ஊர்வலத்தில் தோழர் ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டார்கள். ஊர்வலத்தில் 3000 பேர் வரையில் கலந்து கொண்டார்கள். கடற்கரையில் 10000 (பதினாயிரம் பேர் வரையில்) கலந்துகொண்டார்கள். ஸ்டாலின் அவர்களும் இரவு 10 மணி வரையில் சாய்வு நாற்காலியில் அமர்ந்திருந்தார். அவரைக் கண்ட பதினாயிரக் கணக்கான மக்கள் மனமிரங்கி கண்ணீர் விட்டனர். திருவாரூரிலிருந்து தோழர் ஸ்டாலின் ஜெகதீஸ் அவர்களின் சகோதரர்கள் இருவரும் வந்திருக்கிறார்கள். திருவாரூரில் உள்ள தோழர் ஸ்டாலின் அவர்களின் உயிர் நண்பர்கள் ஒரு கமிட்டிகூடி தோழர் ஸ்டாலின் அவர்கள் உண்ணாவிரதத்தை நிறுத்தி வைக்கும்படி கேட்டுக்கொள்ளும் பொருட்டு தோழர் டி. என். இராமன் (திருவாரூர் ஹிந்தி எதிர்ப்புக் கமிட்டியின் காரியதரிசி) அவர்களை அனுப்பினார்கள். அவர் வந்து உண்ணாவிரதத்தை நிறுத்திக் கொள்ளும்படி கேட்டுக்கொண்டார். தோழர் ஸ்டாலின் தமது நண்பர்களின் அன்புக்குத் தலை வணங்குவதாகவும் ஆனால் உண்ணா நோன்பை நிறுத்தும்படி கேட்க வேண்டாம் என்றும் ஹிந்தியை ஒழிக்கும் வரையில் தாம் உண்ணாவிரதத்தை விட முடியாதென்றும் பணிவாகத் தெரிவித்துக் கொண்டார். உடல் நிலை நாளுக்குநாள் மெலிந்து வருகிறது. மிக நெருங்கிய நண்பர்கள் தவிர மற்றவர்கள் வந்து பார்த்து தொந்தரவு கொடுக்கக் கூடாதென்று டாக்டர்கள் சொல்லிவிட்டார்கள். வெளியில் கூட்டங்களுக்குச் சென்று சாய்வு நாற்காலியில் சாய்ந்திருப்பதுகூட இப்போதைய நிலைமைக்கு நல்லதல்லவென்று டாக்டர்கள் சொல்லியிருந்தபோதிலும் தோழர் ஸ்டாலின் உடல் நிலையையும் பொருட்படுத்தாமல் கூட்டங்களுக்குச் சென்று வருகிறார்.

---